# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காஞ்சிபுரம்.

# O.S.No.228/2013

2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் நாள் பிரதிவாதியின் சாட்சிய வாக்குமூலம் இந்நீதிமன்றத்தால் ஆணையிட்டு 1879 ஆம் ஆண்டின் 10-வது சட்ட விதிகளின் படி திரு.புஷ்பராஜ், இளநிலை உதவியாளர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | **ராஜேந்திரன்** | தொழில் |
| தந்தை பெயர் | அப்பாசாமி | கிராமம் |
| வயது | | வட்டம் |
| நேரம் | 03.10 | |

**பி.வா.சா.1 குறுக்குவிசாரணையின் தொடர்ச்சி**

**A.**இந்த வழக்கு சொத்தை நானும் எனது முன்னோர்களும் அனுபவித்து வருவதாக கூறும் பட்சத்தில் அதற்கான பட்டா சிட்டா ஏதேனும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பார்த்திபன் என்பவருக்கு முன்னர் பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் கன்னியப்ப நாயக்கர், பெருமாள், அன்னம்மாள் மற்றும் கருப்பாயி அம்மாள் பெயரில் இருந்தது. அதற்கான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

**B.**இந்த வழக்கு சொத்து பழண்டி மற்றும் சந்திரன் பெயரில் கூட்டுப்பட்டாவாக இருந்தது என்று சொன்னால் அதை நான் மறுக்கிறேன்.

தாவா சொத்து கிழக்கு மேற்கு 210 சதுரடியும் வடக்கு தெற்கு 32 சதுரடியாகும். வடக்கு தெற்கு 37 அடி என்று சொன்னால் அதை நான் மறுக்கிறேன். 32 அடி தான் சரியானது. எவ்வளவு சதுர மீட்டர் என்று சொன்னால் எனக்கு தெரியாது. பார்த்திபன் பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டதன் பேரில் என்னால் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் இல்லை.

**C.**தாவா சொத்தின் வடக்கு பக்கத்தில் எத்தனை மனைகள் உள்ளது என்றால் 6 மனைகள். மேற்கு பக்கத்தில் உடையாரின் நிலம் உள்ளது. சின்னதம்பி மற்றும் அவரது மனைவிகளான அன்னம்மாள் மற்றும் கருப்பாயி அம்மாள் பெயரில் பட்டா சிட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு எனக்கு எதிராக ஒரு தலை பட்சமாக தீர்பான விவரம் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் பழைய புல எண் 664/4 புதிய புல எண் தெரியாது. புதிய புல எண் 664/4ஏ என்றால் அதன் விவரம் எனக்கு தெரியாது.

**D.**25.07.2014 அன்று இவ்வழக்கு ஒரு தலை பட்சமாக தீர்ப்பாகியும் அதற்கு மேற்கொண்டு நிறைவேற்று மனு தாக்கல் செய்து அதன் பேரில் என்னை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.10ல் கண்டுள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். 2வது கையெழுத்து என்னுடைய

மகனுடையது.

**E.**இவ்வழக்கு சொத்தை சந்திரன் என்பவர் பழண்டிக்கு விடுதலை பத்திரம் மூலம் எழுதி கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த விடுதலை பத்திரத்தை முன்வைத்து வாதியின் தகப்பனார் வாதிக்கு 16.05.2008 அன்று செட்டில்மென்ட் ஆவணம் செய்து வைத்த விவரமும் தெரியாது. இந்த 2 ஆவணங்கள் முன்னிலையில்தான் வாதி அவரது பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்த விவரமும் தெரியாது. 23.03.2016 அன்று கைது நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன்பேரில் நானும் எனது மகனும் கைது செய்யபட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டோம் என்றால் சரிதான்.

**F.**மேற்சொன்ன கைது நடவடிக்கையில் தாக்கல் செய்யப்பட்ட நிறைவேற்று மனுவில் புதிய புல எண் 664/4ஏ என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் 2ம் பத்தியில் எனது தந்தையார் அப்பாசாமி நாயக்கர் என்பவர் கடந்த 26.07.1990ல் ஒரு பதிவு செய்த செட்டில்மென்ட் ஆவணத்தை ஆவண எண் 1649/1990 முன்னிலைக்கு என்று குறிப்பிட்டிருக்கும் பட்சத்தில் அப்பாசாமி நாயக்கருக்கு எப்படி இந்த சொத்து கிடைக்கப்பட்டது என்றால் என் தாத்தா சின்னதம்பியின் மனைவிகளான அன்னம்மாள் மற்றும் கருப்பாயி அம்மாள் வழி

கிடைக்கப்பட்ட சொத்தாகும். அதற்கான எழுத்துமூலமான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 26.07.1990 தேதியிட்ட செட்டில்மென்ட் கனரா வங்கியில் அடமானம் வைத்துள்ளேன். வங்கியின் விவரத்தை எனது பிரமாண வாக்குமூலத்தில் தெரிவிக்கவில்லை என்றால் வங்கி என்று தெரிவித்துள்ளேன். கடனை இந்நாள் வரை பைசல் செய்யவில்லை. அதற்கான கடன் கணக்கு புத்தகத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கடன் வாங்கியது உண்மை என்றால் அதற்கான புத்தகத்தை இந்நீதிமன்றத்தில் சமர்ப்பித்து முறையான வங்கியின் பெயரையும் பிரமாண வாக்குமூலத்தில் தாக்கல் செய்து இருப்பேன் என்று சொன்னால் அதை நான் மறுக்கிறேன்.

**G.**மேற்சொன்ன 26.07.1990 செட்டில்மென்ட் ஆவணத்தை வழக்கு எண் 836/1998ல் தாக்கல் செய்யவில்லை என்றால் அதை நான் மறுக்கிறேன். அந்த வழக்கை நானும் நிர்மலா என்பவரும் சேர்ந்து சந்திரன், பழண்டி மற்றும் லலிதா பெயரில் தாக்கல் செய்தோம். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆன 836/1998ற்கான தீர்ப்புரையில் 1 முதல் 14 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது அதில் மேற்சொன்ன 26.07.1990ற்காக செட்டில்மென்ட் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

**H.**வாதியை அளக்கழிக்கும் நோக்குடன் எனது தந்தை தானாக ஒரு

செட்டில்மென்ட் ஆவணத்தை தயார் செய்துள்ளார் என்றால் அதை நான் மறுக்கிறேன். அந்த ஆவணம் உண்மை எனும் பட்சத்தில் மேற்சொன்ன வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் அதை நான் மறுக்கிறேன். வாதியிடம் இருந்து சொத்தை அபகரிக்கும் நோக்குடன் மேற்சொன்ன ஆவணங்கள் தயார் செய்யப்பட்டவை என்று சொன்னால் அதை நான் மறுக்கிறேன்.

I. எனது பிரமாண வாக்குமூலத்தில் இந்தியன் வங்கியில் அடமானம் வைத்ததாக உள்ளது என்றால் சரிதான். எதற்காக என்றால் விவசாய கடன் பெறுவதற்காக அடமானம் வைக்கப்பட்டது. உண்மையாக கடன் பெற்றிருக்கும் பட்சத்தில் வங்கியின் பெயரை தெளிவாக குறிப்பிட்டிருப்பேன் என்றால் இந்தியன் வங்கி என்று தவறுதலாக குறிப்பிட்டிருக்கிறது. கனரா வங்கியில் தான் அடமானம் வைத்தேன். கடன் கொடுப்பதற்கு முன்பே வழக்கறிஞரின் கருத்துரை மற்றும் கடன் அளித்ததற்கான சேங்ஷன் லெட்டர் கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான். அந்த ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 1994ம் ஆண்டில் பெற்ற கடனை பற்றி 1998ல் நான் தொடுத்த வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் ஆமாம் குறிப்பிடவில்லை. ஏன் குறிப்பிடவில்லை என்றால் எனது வழக்கறிஞரிடம் நான் கூறாததால் அவர் குறிப்பிடவில்லை. இந்த வழக்கின் பதிலுரையிலோ பிரமாண

வாக்குமூலத்திலோ கடனை பற்றி குறிப்பிடவில்லை என்று சொன்னால் அதை நான் மறுக்கிறேன்.

**(குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

**Sd./-Saranya Selvam**
**Additional District Munsif,**
**Kancheepuram.**